# பெரியார் பல்கலைக்கழகம்

பெரியார் பல்கலை நகர்

சேலம் – 636 011.

இரண்டாம் ஆண்டு - நான்காம் பருவம்

கலையியல், அறிவியல்

பட்டவகுப்பு – பருவமுறைப் பாடத்திட்டம் – CBCS

பாடமுறை

அடிப்படைத் தமிழ்

2021–2022 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெறும்

மாணவர்களுக்குரியது

## நான்காம் பருவம்

## தாள்–4: பண்டைய இலக்கியங்களும் நாடகமும்

**பாடநோக்கம்**

சங்க இலக்கியத்தின் சிறப்பையும், நாடகம் என்னும் இலக்கிய வகையின் தன்மையையும் அகத்திணை, புறத்திணை இலக்கணங்களையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.

**பயன்கள்:**

1. தமிழின் தொன்மையையும், செம்மொழித் தகுதியையும் அறிந்து கொள்ளுதல்.
2. நாடக இலக்கியம் மூலம் நடிப்பாற்றலையும், கலைத்தன்மையையும், படைப்பாற்றலையும் வளர்த்தல்.
3. பண்டைத் தமிழ் இலக்கியங்களைக் கற்றல்.
4. மொழியறிவோடு வேலை வாய்ப்பினைப் பெறுதல்.

**அலகு–1: சங்க இலக்கியம்**

அ) முல்லைப்பாட்டு –முழுவதும்

ஆ) குறுந்தொகை –27, 40, 58, 69, 242 (5 பாடல்கள்)

இ) அகநானூறு – 12, 15, 130 (3 பாடல்கள்)

ஈ) கலித்தொகை – 115, 133 (2 பாடல்கள்)

உ) புறநானூறு – 49, 51, 66, 74, 121 (5 பாடல்கள்)

ஊ) பதிற்றுப்பத்து – ததைந்த காஞ்சி (23)
உரைசால் வேள்வி (64)

**அலகு–2 : பதினெண் கீழ்க்கணக்கு**

அ) திருக்குறள் – பொறையுடைமை, நலம்புனைந்துரைத்தல்

ஆ) நாலடியார் – சினம் இன்மை (1–10 பாடல்கள்)

இ) பழமொழி – இன்னாசெய்யாமை முதல் 5 பாடல்கள்

ஈ) நான்மணிக்கடிகை –45, 49, 57, 64, 71 (5 பாடல்கள்)

உ) சிறுபஞ்ச மூலம் – 7, 9, 27, 31, 43 (5 பாடல்கள்)

ஊ) இன்னா நாற்பது – 6, 7, 13, 19, 24 (5 பாடல்கள்)

**அலகு–3: நாடகம்**

இன்குலாப் – ஔவை – அகரம் பதிப்பகம்
15-B1, சரவணா காம்ப்ளெக்ஸ்
வெள்ளப்பண்டாரத்தெரு
கும்பகோணம் 612 001.

**அலகு–4: இலக்கிய வரலாறு**

அ) தமிழின் தொன்மையும் சிறப்பும்

ஆ) முச்சங்க வரலாறு

இ) சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள்

ஈ) எட்டுத்தொகை

உ) பத்துப்பாட்டு

ஊ) பதினெண் கீழ்க்கணக்கு

**பாட நூல்:**

தமிழ் இலக்கியவரலாறு – முனைவர் மு.வரதராசன்
சாகித்திய அகாதெமி, டெல்லி

தமிழ் இலக்கிய வரலாறு – சிற்பி பாலசுப்பிரமணியம்
முனைவர் சொ.சேதுபதி
கவிதா பப்ளிகேஷன், சென்னை.

**பார்வை நூல்கள்**

1. தமிழ் இலக்கிய வரலாறு – தெ.பொ.மீ
2. தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர் மது.ச.விமலானந்தம்
3. புதிய தமிழ் இலக்கிய வரலாறு – பதிப்பாசிரியர்கள்
   சிற்பி, நீலபத்மநாபன் (தொகுதி–1)

**அலகு–5: இலக்கணம்**

அ) அகத்திணை – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைத் திணைகள் மட்டும்

ஆ) புறத்திணை – வெட்சி, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல் திணை விளக்கங்கள்.

# செய்யுட் பகுதி

## முல்லைப்பாட்டு
(முழுவதும்)

### 1-6 : கார்ப்பருவத்தின் வருகை

*நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்*
*பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு*
*கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை*

### 7-11 : மகளிர், தெய்வத்தை வழிபட்டு விரிச்சி கேட்டல்

*அருங் கடிமூதூர் மருங்கில் போகி,*
*யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,*
*நாழி கொண்ட, நறு வீ முல்லை*
*அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,*
*பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப*

### 12-23 : தலைவியைத் தேற்றுதல்

### நற்சொல் கேட்டல்

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்*
*நடுங்குசுவல் அசைத்த கையள் கைய*
*கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர*
*இன்னே வருகுவர் தாயர் என்போள்*
*நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்*

## தலைவியிடம் செய்தி கூறல்

நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவரல் எவ்வம் களை மா யோய்எனக்

## தலைவியின் கண்ணீர்

காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்பு முத்துறைப்பக்

## 24-28 : பாசறையின் இயல்பு

## பாசறை - படைவீடு

கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக், காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணிரியிற் பரந்த பாடி

## 29-36 : யானைப் பாகரது செயல்

## யானைக்குச் சோறு கொடுத்தல்

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த
வயல்விளைஇன்குளகு உண்ணாது, நுதல்துடைத்து
அயில்நுனை மருப்பில்தம் கையிடைக்கொண்டெனக்
கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப,

## 37-42 : வீரர்கள் தங்கும் படைவீடுகள்

### படைவீடு அரண்

*கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்*
*முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்*
*ஓடா வல்வில் தூணி நாற்றிக்*
*கூடங் குத்திக் கயிறுவாங்கு இருக்கைப்*
*பூந்தலை குந்தம் குத்திக் கிடுகுநிரைத்து*
*வாங்குவில் அரணம் அரணம் ஆக*

## 43-44 : அரசனுக்கு அமைத்த பாசறை

### விளக்கேற்றும் மகளிர்

*வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்*
*நெடுங்காழ்க் கண்டம் கோலி அகம்நேர்பு*

பல்வேறு படை வீரர்களின் இருக்கைக்கு நடுவே, வேறு ஒரு தனி இடத்தில், நெடிய குத்துக்கால்களுடன் சேர்த்துச் செய்த பலவண்ணத் திரைச் சீலைகளை வளைத்துக் கட்டி, அரசனுக்கு என்று தனியாக ஓர் உள்வீட்டை வீரர்கள் அனைவரும் அமைத்துக் கொடுத்தனர்.

## 45-49 : மங்கையர் விளக்கேற்றும் மகளிர்

*குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து*
*இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்*
*விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்*
*நெய்யுமிழ் கரையர் நெடுந்திரி கொளீஇக்*
*கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட*

## 50-54 : மெய்காப்பாளர் காவல் புரிதல்

### மெய்க்காப்பாளர் காவல்

*நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள்*
*அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்*
*சிதர்வரல் அசைவளிக்கு அசைவந் தாங்குத்*
*துகின் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்*
*பெருமூ தாளர் ஏனம் சூழ.*

## 55-58 : நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்

### பொழுதறிந்து கூறுவோர்

*பொழுதுஅளந் தறியும் பொய்யா மாக்கள்*
*தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி*
*எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்*
*குறுநீர்க் கன்னல் இனைத்தென்று இசைப்ப,*

## 59-66 : வன்கண் யவனரும் மிலேச்சரும்

### அரசனின் பள்ளியறைக் காவலர்

*மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை*
*மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து*
*வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்*
*புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்*
*திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்*
*எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்*
*உடம்பின் உரைக்கும் உரையா நாவிற்*
*படம்புகு மிலேச்சர் உழையர் ஆக,*

## 67-76 : பாசறையின்கண் வேந்தன் மனநிலை

*மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது*
*எடுத்தெறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து*
*பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்*
*பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமியத்*
*தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்*
*சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு*
*வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து*
*உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்,*
*ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை*
*முடியொடு கடகம் சேர்த்தி நெடிதுநினைந்து*

## 77-79 : பாசறையில் வெற்றி முழக்கம்

*பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்*
*நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி*
*அரசிருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை*

## 80-88 : தலைவனது பிரிவால் தலைவி உற்ற துயரம்

*இன்துயில் வதியுநன் காணாள் துயருழந்து*
*நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு*
*நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்*
*மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்*
*ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து*
*பாவை விளக்கில் பரூஉச்சுடர் அழல*
*இடம்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து*
*முடங்கிறைச் சொரிதரு மாத்திரள் அருவி*
*இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்*

## 89-92 : அரசன் வெற்றியுடன் திரும்பி வருதல்

*அஞ்செவி நிறைய ஆலின, வென்றுபிறர்*
*வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு*
*விசய வெல்கொடி உயரி வலன்ஏர்பு*
*வயிரும் வளையும் ஆர்ப்ப, அயிர*

## 93-100 : மழையினால் செழித்த முல்லை நிலம் காணுதல்

*செறியிலைக் காயா அஞ்சனம் மலர*
*முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்*
*கோடல்குவிமுகை அங்கை அவிழத்*
*தோடார் தோன்றி குருதி பூப்பக்*
*கானம் நந்திய செந்நிலப் பெருவழி*
*வானம் வாய்ந்த வாங்குகதிர் வரகின்*
*திரிமருப்பு இரலையொடு மடமான் உகள*
*எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்*

## 101-103 : அரசனது தேரின் வருகை

*முதிர்காய் வள்ளியங் காடுபிறக்கு ஒழியத்*
*துனைபரி துரக்கும் செலவினர்*
*வினைவிளங்கு நெடுந்தேர் பூண்டமாவே.*

# குறுந்தொகை

## 27. தலைவி கூற்று

**கூற்று** – பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

பாலை — வெள்ளிவீதியார்

*கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,*
*நல்ஆன் தீம்பால் நிலத்துக் காஅங்கு,*
*எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,*
*பசலை உணீஇயர் வேண்டும்*
*திதலை அல்குல்என் மாமைக் கவினே.*

## 40. தலைவன் கூற்று

**கூற்று** - இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர்ப் 'பிரிவர்' எனக்கருதி, அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு, தலைமகன் கூறியது.

குறிஞ்சி செம்புலப் பெயனீரார்

*யாயும் ஞாயும் யார்ஆ கியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல்நீர் போல,*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.*

## 58. தலைவன் கூற்று

**கூற்று** - கழற்றெதிர்மறை

குறிஞ்சி வெள்ளிவீதியார்

*இடிக்கும் கேளிர்! நும்குறை ஆக*
*நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல;*
*ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்*
*கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்*
*வெண்ணெய் உணங்கல் போலப்*
*பரந்தன்று, இந்நோய்; நோன்றுகொளற்குஅரிதே!*

## 69. தோழி கூற்று

**கூற்று** - தோழி இரவுக்குறி மறுத்தது.

குறிஞ்சி கடுந்தோட் கரவீரன்

*கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்*
*கைம்மை உய்யாக் காமர் மந்தி*
*கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,*
*ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்*
*சாரல் நாட! நடுநாள்*
*வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே!*

## 242. செவிலித்தாய் கூற்று

கூற்று - கற்புக் காலத்துக் கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.

முல்லை குழற்றத்தன்

*கானங் கோழிக் கவர்குரற் சேவல்*
*ஒண்பொறி எருத்தில் தண்சிதர் உறைப்பப்*
*புதல்நீர் வாரும் பூநாறு புறவில்*
*சீறூ ரோளே, மடந்தை வேறுஊர்*
*வேந்துவிடு தொழிலொடு செலினும்,*
*சேந்துவரல் அறியாது, செம்மல் தேரே.*

# அகநானூறு

## 12. தோழி கூற்று

கூற்று - பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியால் செறிப்பு அறிவுறுக்கப்பட்டு, 'இரவுக்குறி வாரா வரைவல்' என்றாற்கு, அதுவும் மறுத்து, வரைவு கடாயது.

குறிஞ்சி கபிலர்

*யாயே, கண்ணினும் கடுங்கா தலளே;*
*எந்தையும், நிலன்உறப் பொறாஅன், 'சீறடிசிவப்ப,*
*எவன்! இல! குறுமகள்! இயங்குதி?' என்னும்;*
*யாமே; பிரிவுஇன்று இயைந்த துவராநட்பின்,*
*இருதலைப் புள்ளின் ஓர்உயிர் அம்மே;*
*ஏனல்அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்,*
*கிளிவிளி பயிற்றும் வெளில்ஆடு பெருஞ்சினை,*
*விழுக்கோள் பலவின் பழுப்பயம் கொண்மார்,*
*குறவர் ஊன்றிய குரம்பை புதைய,*
*வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்*
*புலிசெத்து, வெரீஇய புகர்முக வேழம்,*
*மழைபடு சிலம்பில் கழைபட, பெயரும்*
*நல்வரை நாட! நீ வரின்,*
*மெல்லியம் ஓரும் தான்வா ழலளே.*

## 15. நற்றாய் கூற்று

**கூற்று** - மகட்போக்கிய தாய் சொல்லியது.

பாலை மாமூலனார்

*எம்வெங் காமம் இயைவது ஆயின்,*
*மெய்ம்மலி பெரும்பூண், செம்மற் கோசர்*
*கொம்மைஅம் பசுங்காய்க் குடுமி விளைந்த*
*பாகல் ஆர்கைப் பறைக்கண் பீலித்*
*தோகைக் காவின் துளுநாட்டு அன்ன,*
*வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்*
*செறிந்த சேரிச் செம்மல் மூதூர்,*
*அறிந்த மாக்கட்டு ஆகுக தில்ல–*
*தோழி மாரும் யானும் புலம்பச்*
*சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்*
*பாழி அன்ன கடியுடை வியல்நகர்ச்*
*செறிந்த காப்புஇகந்து, அவனொடு போகி,*
*அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்*
*துய்த்த வாய, துகள் நிலம் பரக்க,*
*கொன்றை அம்சினைக் குழற்பழம் கொழுதி,*
*வன்கை எண்கின் வயநிரை பரக்கும்–*
*இன்துணைப் படர்ந்த கொள்கையொடு ஓராங்குக்*
*குன்ற வேயின் திரண்டஎன்*
*மென்தோள் அஞ்ஞை சென்ற ஆறே!*

## 130. தலைவி கூற்று

**கூற்று** - கழறிய பாங்கற்குத் தலைமகன், கழற்றெதிர் மறுத்தது.

நெய்தல் வெண்கண்ணனார்

*அம்ம வாழி, கேளிர்! முன்நின்று*
*கண்டனிர் ஆயின், கழறலிர் மன்னோ–*
*நுண்தாது பொதிந்த செங்கால் கொழுமுகை*
*முண்டகம் கெழீஇய மோட்டுமணல் அடைகரை,*
*பேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை*
*எயிறுடை நெடுந்தோடு காப்ப, பலஉடன்*

*வயிறுடைப் போது வாலிதின் விரீஇ.*
*புலவுப் பொருதுஅழித்த பூநாறு பரப்பின்*
*இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்*
*கவர்நடைப் புரவிகால் வடுத்த புக்கும்*
*நல்தேர் வழுதி கொற்கை முன்துறை*
*வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்*
*போதுபுறங் கொடுத்த உண்கண்*
*மாதர்வாள் முகம் மதைஇய நோக்கே.*

# புறநானூறு

## 49. பொய்கையார்,

## கோக்கோதை மார்பனைப் பாடியது

**திணை** - பாடாண்

**துறை** - புலவராற்றுப் படை இயன்மொழியும் ஆம்.

*நாடன் என்கோ? ஊரன் என்கோ?*
*பாடுஇமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ?*
*யாங்கனம் மொழிகோ, ஓங்குவாள் கோதையை?*
*புனவர் தட்டை படைப்பின், அயலது*
*இறங்குகதிர் அலமரு கழனியும்,*
*பிறங்குநீர்ச் சேர்ப்பினும், புள்ஒருங்கு எழுமே!*

## 51. ஐயூர் முடவனார்,

## பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைப் பாடியது.

**திணை** - வாகை

**துறை** - அரச வாகை

*நீர்மிகின், சிறையும் இல்லை; தீமிகின்,*
*மன்உயிர் நிழற்று நிழலும் இல்லை;*
*வளிமிகின், வலியும், இல்லை; ஒளிமிக்கு*
*அவற்றுஓர் அன்ன சினப்போர் வழுதி,*
*'தண்தமிழ் பொது'எனப் பொறாஅன், போர்எதிர்ந்து,*
*கொண்டி வேண்டுவன் ஆயின் 'கொள்க'எனக்,*

*கொடுத்த மன்னர் நடுக்கு அற்றனரே;*
*அளியரோ அளியர், அவன் அளிஇழந் தோரே—*
*நுண்பல சிதலை அரிது முயன்று எடுத்த*
*செம்புற்று ஈயல் போல,*
*ஒருபகல் வாழ்க்கைக்கு உலமரு வோரே!*

## 66. வெண்ணிக் குயத்தியார்,

### சோழன் கரிகால் பெருவளத்தானைப் பாடியது.

**திணை** - வாகை

**துறை** - அரச வாகை

*நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி,*
*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!*
*களிறுஇயல் யானைக் கரிகால் வளவ!*
*சென்று,அமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற*
*வென்றோய்! நின்னினும் நல்லன்அன்றே—*
*கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,*
*மிகப்புகழ் உலகம் எய்திப்*
*புறப்புண் நாணி, வடக்கிருந் தோனே?*

## 74. சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடியது.

**திணை** - பொதுவியல்

**துறை** - முதுமொழிக் காஞ்சி

*குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,*
*'ஆள்அன்று' என்று வாளின் தப்பார்;*
*தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய*
*கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்,*
*மதுகை இன்றி, வயிற்றுத்தீத் தணியத்*
*தாம்இரந்து உண்ணும் அளவை*
*ஈன்ம ரோஇவ் உலகத் தானே?*

### 121. கபிலர்,

### மலையமான் திருமுடிக்காரியைப் பாடியது,

**திணை** - பொதுவியல்

**துறை** - பொருண்மொழிக் காஞ்சி.

*ஒருதிசை ஒருவனை உள்ளி, நால்திசைப்*
*பலரும் வருவர், பரிசில் மாக்கள்,*
*வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்,*
*ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!*
*அதுநற்கு அறிந்தனை ஆயின்,*
*பொதுநோக்கு ஒழிமதி, புலவர் மாட்டே!*

## கலித்தொகை

### 115. தலைவி கூற்று

**கூற்று** - இஃது தலைவி, 'களவு வெளிப்பட்ட'தென்று அஞ்சித் தோழிக்குச் சொல்ல, 'நமர் நின்னை அவற்கே கொடுக்கச் சூழ்ந்தார்' எனச் சொல்லி, அச்சம் நீக்கியது.

*தோழி!நாம், காணாமை உண்ட கடுங்கள்ளை, மெய்கூர,*
*நாணாது சென்று நடுங்க உரைத்தாங்குக்*
*கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம் கண்டாய்,நம்—*
*புல்லினத்து ஆயர்மகன்சூடி வந்ததோர்*
*முல்லை ஒரு காழும் கண்ணியும், மெல்லியால்!*
*கூந்தலுள் பெய்து முடித்தேன்மன்; தோழி! யாய்*
*வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே,*
*அன்னையும் அத்தனும் இல்லரா, யாய்நாண,*
*அன்னைமுன் வீழ்ந்தன்று, அப்பூ.*
*அதனை வினவலும் செய்யாள், சினவலும் செய்யாள்,*
*நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு,*
*நீங்கிப் புறங்கடைப் போயினாள்; யானும், என்*
*சாந்துளர் கூழைமுடியா, நிலம்தாழ்ந்த*
*பூங்கரை நீலம் தழீஇ, தளர்பு ஒல்கிப்*
*பாங்கரும் கானத்து ஒளித்தேன், 'அதற்கு எல்லா!'*
*ஈங்கு எவன் அஞ்சுவது?*

*அஞ்சல்–அவன் கண்ணி நீபுனைந்தா யாயின், நமரும்*
*அவன்கண் அடைசூழ்ந்தார், நின்னை, அகன்கண்;*
*வரைப்பில் மணல்தாழப் பெய்து, திரைப்பில்*
*வதுவையும் ஈங்கே அயர்ப; அதுவேயாம்,*
*அல்கலும் சூழ்ந்த வினை.'*

## 133. தோழி கூற்று

**கூற்று** – இஃது "வரைவுடம் பட்டோர்க் கடாவல் வேண்டினும்" என்பதனால் தலைவன் நெருளாதவனைத் தெருட்டி வரைவுகடாயது.

*மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்குடன்*
*கானம் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்,*
*சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்ந்த*
*நீர்மலி கரகம்போல் பழம்தூங்கு முடத்தாழைப்*
*பூமலர்ந்தவை போலப் புள்அல்கும் துறைவ! கேள்*
*'ஆற்றுதல்' என்பதுஒன்று அலர்ந்தவர்க்குஉதவுதல்;*
*'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;*
*'பண்பு'எனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்;*
*'அன்பு'எனப் படுவது தன்கிளை செறாஅமை;*
*'அறிவு'எனப் படுவது பேதையார் சொல்நோன்றல்;*
*'செறிவு'எனப் படுவது, கூறியது மறாஅமை;*
*'நிறைவு'எனப் படுவது மறைபிறர் அறியாமை;*
*'முறை'எனப் படுவதுகண்ணோடாது உயிர்வௌவல்;*
*'பொறை'எனப் படுவது, போற்றாரைப் பொறுத்தல்.*
*ஆங்கதை அறிந்தனி ராயின், என்தோழி*
*நன்னுதல் நலன்உண்டு துறத்தல்– கொண்க!–*
*தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்;*
*நின்தலை வருந்தியாள் துயரம்*
*சென்றனை களைமோ; பூண்க,நின் தேரே!*

# பதிற்றுப்பத்து

## 23. தகைந்த காஞ்சி

### (வென்றிச் சிறப்பு)

**பெயர்** - தகைந்த காஞ்சி
**துறை** - வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு
**வண்ணம்** - ஒழுகு வண்ணம்
**தூக்கு** - செந்தூக்கு

*அலந்தலை உன்னத்து அம்கவடு பொருந்திச்*
*சிதடி கரைய, பெருவறம் கூர்ந்து,*
*நிலம்பைது அற்ற புலம்கெடு காலையும்,*
*வாங்குபு தகைத்த கலப்பையர் ஆங்கண்*
*மன்றம் போந்து, மறுகுசிறை பாடும்*
*வயிரிய மாக்கள் கடும்பசி நீங்க,*
*பொன்செய் புனைஇழை ஒலிப்ப, பெரிதுஉவந்து,*
*நெஞ்சுமலி உவகையர் உண்டுமலிந்து ஆட,*
*சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்,*
*போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!*
*நின்நயந்து வருவேம் கண்டனம்; புல்மிக்கு,*
*வழங்குநர் அற்றென, மருங்குகெடத் தூர்ந்து,*
*பெருங்கவின் அழிந்த ஆற்ற, ஏறுபுணர்ந்து,*
*அண்ணல் மரையா அமர்ந்துஇனிது உறையும்*
*விண்உயர் வைப்பின காடு ஆயின - நின்*
*மைந்துமலி பெரும்புகழ் அறியார் மலைந்த*
*போர்எதிர் வேந்தர் தார்அழிந்து ஒராலின்-*
*மருது இமிழ்ந்து ஓங்கிய நளிஇரும் பரப்பின்*
*மணல்மலி பெருந்துறைத் தகைந்த காஞ்சியொடு,*
*முருக்குத்தாழ்பு எழிலிய நெருப்புஉறழ் அடைகரை,*
*நந்து நாரையொடு செவ்வரி உகளும்*
*கழனி வாயிற் பழனப் படப்பை,*
*அழல்மருள் பூவின் தாமரை, வளைமகள்*
*குறாஅது மலர்ந்த ஆம்பல்,*
*அறாஅ யாணர்அவர் அகன்தலை நாடே.*

## 64. உரைசால் வேள்வி

### (மன்னவன் கொடைச்சிறப்பினை வென்றிச் சிறப்பொடு படுத்துக் கூறுதல்)

பெயர் - உரைசால் வேள்வி

துறை - காட்சிவாழ்த்து

வண்ணம் - ஒழுகு வண்ணம்

தூக்கு - செந்தூக்கு

*வலம்படு முரசின் வாய்வாள் கொற்றத்துப்*
*பொலம்பூண் வேந்தர் பலர்தில்; அம்ம!*
*அறம்கரைந்து வயங்கிய நாவின், பிறங்கிய*
*உரைசால் வேள்வி முடித்த கேள்வி,*
*அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர்பட்டு,*
*இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றத்துக்*
*களிறுநிலை முணைஇய தார்அருந் தகைப்பின்,*
*புறஞ்சிறை வயிரியர்க் காணின், 'வல்லே,*
*எஃகுபடை அறுத்த கொய்சுவல் புரவி,*
*அலங்கும் பாண்டில், இழைஅணிந்து ஈம்'என*
*ஆனாக் கொள்கையை ஆதலின், அவ்வயின்*
*மாஇரு விசும்பில் பல்மீன் ஒளிகெட*
*ஞாயிறு தோன்றியாங்கு, மாற்றார்*
*உறுமுரண் சிதைத்த நின்நோன் தாள்வாழ்த்திக்*
*காண்கு வந்திசின்– கழல்தொடி அண்ணல்!*
*மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்*
*இதழ்வனப்பு உற்ற தோற்றமொடு, உயர்ந்த*
*மழையினும் பெரும்பயம் பொழிதி; அதனால்,*
*பசியுடை ஒக்கலை ஒரீஇய*
*இசைமேம் தோன்றல்!நின் பாசறை யானே.*

# திருக்குறள்

## பொறை உடைமை

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை.*

*பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறத்தல் அதனினும் நன்று.*

*இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்*
*வன்மை மடவார்ப் பொறை.*

*நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை*
*போற்றி ஒழுகப் படும்.*

*ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.*

*ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றும் துணையும் புகழ்.*

*திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்து*
*அறன்அல்ல செய்யாமை நன்று.*

*மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.*

*துறந்தாரின் தூய்மை உடையார் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்.*

*உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச்சொல் நோற்பாரின் பின்.*

## நலம் புனைந்து உரைத்தல்

*நல்நீரை வாழி அனிச்சமே நின்னினும்*
*மெல்நீரள் யாம்வீழ் பவள்.*

*பலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்*
*பலர்காணும் பூஒக்கும் என்று.*

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு.

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று.

அனிச்சப்பூக் கால்களையான் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்.

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து.

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி ஆயின்
பலர்காணத் தோன்றல் மதி.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

## நாலடியார்

### சினம் இன்மை

மதித்து இறப்பாரும் இறக்க! மதியார்
மிதித்து இறப்பாரும் இறக்க! மிதித்து ஏறி,
ஈயும் தலைமேல் இருத்தலால், அஃது அறிவார்
காயும் கதம் இன்மை நன்று.

தண்டாச் சிறப்பின் தம் இன் உயிரைத் தாங்காது
கண்டுழி எல்லாம் துறப்பவோ - மண்டி
அடி பெயராது? ஆற்ற இளி வந்த போழ்தின்,
முடிகிற்கும் உள்ளத்தவர்?

காவாது, ஒருவன் தன் வாய் திறந்து சொல்லும் சொல்
ஓவாதே தம்மைச் சுடுதலால், ஓவாதே
ஆய்ந்துஅமைந்த கேள்வி அறிவுடையார்எஞ்ஞான்றும்
காய்ந்து அமைந்த சொல்லார், கறுத்து.

நேர்த்து, நிகர் அல்லார் நீர் அல்ல சொல்லியக்கால்.
வேர்த்து வெகுளார், விழுமியோர், ஓர்த்து அதனை,
உள்ளத்தான் உள்ளி, உரைத்து, உராய், ஊர் கேட்ப
துள்ளி, தூண் முட்டுமாம், கீழ்.

இளையான் அடக்கம் அடக்கம், கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப் பயன், எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடையாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

கல் எறிந்தன்ன கயவர் வாய் இன்னாச் சொல்
எல்லாரும் காணப் பொறுத்து, உய்ப்பர் - ஒல்லை
இடு நீற்றால் பை அவிந்த நாகம்போல், தம்தம்
குடிமையான் வாதிக்கப்பட்டு.

மாற்றாராய் நின்று, தம் மாறு ஏற்பார்க்கு ஏலாமை
ஆற்றாமை என்னார், அறிவுடையார், ஆற்றாமை
நேர்த்து, இன்னா மற்று அவர் செய்தக்கால், தாம் அவரைப்
பேர்த்து இன்னா செய்யாமை நன்று.

நெடுங்காலம் ஓடினும், நீசர் வெகுளி
கெடும் காலம் இன்றிப் பரக்கும், அடும்காலை
நீர் கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர் கொண்ட சான்றோர் சினம்.

உபகாரம் செய்ததனை ஓராதே, தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும், உபகாரம்
தாம் செய்வது அல்லால், தவற்றினால் தீங்கு ஊக்கல்
வான் தோய் குடிப்பிறந்தார்க்கு இல்.

கூர்த்து நாய் கௌவிக் கொளக் கண்டும், தம்வாயால்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கு இல்லை நீர்த்துஅன்றிக்
கீழ்மக்கள் கீழ் ஆய சொல்லியக்கால், சொல்பவோ,
மேன்மக்கள் தம் வாயால் மீட்டு.

# பழமொழி

## இன்னா செய்யாமை

*வினைப் பயம் ஒன்று இன்றி, வேற்றுமை கொண்டு*
*நினைத்துப் பிறர் பனிப்ப செய்யாமை வேண்டும்*
*புனப்பொன் அவிர் கணங்கின்பூங்கொம்பர்அன்னாய்!*
*தனக்கு இன்னா, இன்னா பிறர்க்கு.*

*பூ உட்கும் கண்ணாய்! பொறுப்பார் எனக் கருதி*
*யாவர்க்கே ஆயினும் இன்னா செயல் வேண்டா*
*தேவர்க்கும் கைகூடாதத் திண் அன்பினார்க்கேயும்*
*நோவச் செயின், நோன்மை இல்.*

*ஆற்றார் இவர் என்று, அடைந்த தாமரையும்*
*தோற்ற, தாம், எள்ளி நலியற்க! –போற்றான்*
*கடை அடைத்து வைத்து, புடைத்தக்கால், நாயும்*
*உடையானைக் கௌவிவிடும்.*

*நெடியது காண்கலாய், நீ அளியை – நெஞ்சே!*
*கொடியது கூறினாய் மன்ற – அடியுளே,*
*முற்பகல் கண்டான் பிறன் கேடு, தன் கேடு*
*பிற்பகல் கண்டுவிடும்.*

*தோற்றத்தால்பொல்லார் துணைஇலார், நல்கூர்ந்தார்*
*மாற்றத்தால் செற்றார், என, வலியார் ஆட்டியக்கால்*
*ஆற்றாது அவர் அழுத கண்ணீரவை அவர்க்குக்*
*கூற்றமாய் வீழ்ந்து விடும்.*

# நான்மணிக்கடிகை

*பொறிகெடும், நாண்அற்ற போழ்தே, நெறிப்பட்ட*
*ஐவரால் தானே வினைகெடும், பொய்யா*
*நலம்கெடும், நீர்அற்ற பைங்கூழ், நலம்மாறின்.*
*நண்பினார் நண்பு கெடும்.*

*போதினான் நந்தும், புனைதண்தார், மற்றுஅதன்*
*தாதிதான் நந்தும், கரும்புஎல்லாம் தீதுஇல்*

வினையினான் நந்துவர், மக்களும், தம்தம்
நனையினான் நந்தும், நறா.

கற்றன்னர், கற்றாரைக் காதலர், கண்ணோடார்
செற்றன்னர், செற்றாரைச் சேர்ந்தவர் - தெற்றென
உற்றது உரையாதார், உள்கரந்து பாம்புஉறையும்
புற்றுஅன்னர், புல்லறி வினார்.

கண்ணுள்ளும் காண்புழிக் காதற்றாம், பெண்ணுள்
உருஇன்றி மாண்ட உளவாம், ஒருவழி
நாட்டுள்ளும் நல்ல பதிஉள, பாட்டுள்ளும்
பாடுஎய்தும் பாட்டே உள.

பதிநன்று, பல்லார் உறையின், ஒருவன்
மதிநன்று, மாசுஅறக் கற்பின், நுதிமருப்பின்
ஏற்றான் வீறுஎய்தும், இனநிரை, தான்கொடுக்கும்
சோற்றான்வீறு எய்தும், குடி.

## சிறுபஞ்சமூலம்

கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு,இத்தனைஆம்என்றுஉரைத்தல்,பண்வனப்புக்
கேட்டார், நன்று என்றல், கிளர்வேந்தன்தன் நாடு
வாட்டான்,நன்று என்றல் வனப்பு.

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம், நீள்கோடு
விலங்கிற்குக் கூற்றம், மயிர்தான் வலம்படா
மாவிற்குக் கூற்றம்ஆம், ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றுஅல் வசை.

ஆண்ஆக்கம் வேண்டாதான் ஆசான், அவற்குஇயைந்த
மாணாக்கன், அன்பான், வழிபடுவான், மாணாக்கன்
கற்புஅனைத்து மூன்றும் கடிந்தான், கடியாதான்
நிற்புஅனைத்தும் நெஞ்சிற்குஓர் நோய்.

வேட்டவன் பார்ப்பான், விளங்கிழைக்குக் கற்புஉடைமை
கேட்பவன் கேடுஇல் பெரும்புலவன் - பாட்டுஅவன்
சிந்தையான் ஆகும், சிறத்தல், உலகினுள்,
தந்தையான் ஆகும், குலம்.

பேண்அடக்கம், பேணாப் பெருந்தகைமை, பீடுஉடைமை
நாண்ஒடுக்கம் என்றுஐந்தும் நண்ணின்றா பூண்ஒடுக்கும்
பொன்வரைக் கோங்கு ஏர்முலைப் பூந்திருவேஆயினும்
தன்வரைத் தாழ்த்தல் அரிது.

## இன்னா நாற்பது

அற மனத்தார் கூறும் கடு மொழி இன்னா
மற மனத்தார் ஞாட்பில் மடிந்து ஒழுகல் இன்னா
இடும்பை உடையார் கொடை இன்னா, இன்னா
கொடும்பாடு உடையார் வாய்ச் சொல்.

ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா
நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா
தேற்றம் இலாதான் துணிவு இன்னா, ஆங்குஇன்னா
மாற்றம் அறியான் உரை.

மணி இலாக் குஞ்சரம் வேந்து ஊர்தல் இன்னா
துணிவு இல்லார் சொல்லும் தறுகண்மை இன்னா
பணியாத மன்னர் பணிவு இன்னா, இன்னா,
பிணி அன்னார் வாழும் மனை.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா
நிலத்து இட்ட நல்வித்து நாறாமை இன்னா
நலத்தகையார் நாணாமை இன்னா, ஆங்கு இன்னா
கலத்தல் குலம் இல் வழி.

ஏமம் இல் மூதூர் இருத்தல் மிக இன்னா
தீமை உடையார் அயல் இருத்தல் நற்கு இன்னா
காமம் முதிரின் உயிர்க்கு இன்னா, ஆங்கு இன்னா
யாம் என்பவரோடு நட்பு.

- - -